# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF SUB COURT, USILAMPATTI

## SUB JUDGE

## S.C. No. 182/ 2025

Deposition of witness for PW 6

Name : சுரேந்திரகுமார்

Father Name :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 31.07.2026

---

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:-**

நான் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டக்காவல ் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.06.2024ம் தேதி உசிலம்பட்டி வட்டக்காவல் ஆய்வாளராக பணிபுரிந்த திரு. ஆனந்த் என்பவர் உத்தப்பநாயக்கனூர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு. ராஜேந்திரன் என்பவர் அன்று நிலைய பொறுப்பில் இருந்த போது உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் இருந்து தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அய்யானார்குளத்தை சேர்ந்த பாலசந்திரன் என்பவர் எழுத்து மூலம் கொடுத்த புகாரினை பெற்று அன்று காவல் நிலையம் வந்து காலை 06.00 மணிக்கு உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையம் குற்ற எண் 113.˙.2024 சட்டப்பிரிவுகள் 294(b), 307, 506(ii) இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் அறிக்கையின் அசல் மற்றும புகார் மனுவினை இணைத்து சம்பந்தம்பட்ட நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார். **புகார் மனு அ.சா.ஆ. 3, முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4** பின்பு விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு. ஆனந்த் அவர்களுக்கு அனுப்பி வைத்த வழக்கு கோப்பினை பெற்று காலை 07.30 மணிக்கு சம்பவ இடமான அய்யனார்குளம் சென்று சாட்சிகள் அறிவு, சதீஷ் ஆகியோா் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வைமகசா ் தயார் செய்துள்ளார். அந்த **பார்வை மகசர் அ.சா.ஆ. 5, மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 6.** பின்பு சம்பவ சாட்சிகள் காயம்பட்ட நபர் பாலசந்திரன், சுப்பு, சிட்டம்மாள், பிரபாகரன், ஜெயராஜ்

ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு சாட்சிகளின் விசாரணையில் இருந்தும், அவரது ரகசிய விசாரணையிலும் சம்பவம் உண்மை என தெரிந்ததால் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி கணேஷ்வரி தேடிச்சென்று எதிரியானவர் சொக்கத்தேவன்பட்டி, அவரது அம்மா பாண்டியம்மாள் வீட்டில் அருகே வைத்து காரணம் கூறி கைது செய்துள்ளார். எதிரியானவர் தானகவே குற்றத்தை ஒப்புக்கொண்டு சம்பவம் பற்றி எவ்வித அச்சுறுத்தல் ஆசைவார்த்தையின்றி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க முன் வந்ததால் சாட்சிகள் தீலிபன், நிருபண் சக்கரவர்த்தி ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அந்த **ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 7** பின்பு ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியபடி வாதியை வெட்டுவதற்கு பயன்படுத்திய ஆயுதமான மீன் வெட்டும் கத்தி மற்றும் அவர் உடுத்திருந்த பச்சை மற்றும் கருப்பு நிறம் கலந்திருந்த நைட்டி ஆகியவற்றை சம்பவ இடமான வீட்டிற்கு முன்புறம் உள்ள துளசி செடியில் மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்துள்ளார். அதை சாட்சிகள் தீலிபன், நிருபண் சக்கரவர்த்தி ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். அந்த **அத்தாட்சி அ.சா.ஆ. 8**. எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரியை பெண் காவலர்கள் மூலம் திரேக பரிசோதனை நிலையம் பாரா வசம் ஒப்படைத்தும், பின் எதிரியை நீதிமன்ற காவலிற்கு உட்படுத்த ஆவணங்கள் தயார் செய்து, சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். வழக்கின் சம்பந்தப்பட்ட சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அந்த **படிவம் 91 அ.சா.ஆ. 9.** மீன் **வெட்டும் கத்தி சா.பொ.1. பச்சை மற்றும் கருப்பு நிறம் கலந்திருந்த நைட்டி சா.பொ.2 நவாபழக்கலர் உள்பாவாடை ஒன்று சா.பொ.3. இரத்தக்கறை படிந்த காவி நிற வேட்டி சா.பொ.4. இரத்தக்கறை படிந்த கருநீல நிற பனியன் சா.பொ.5.** பின்பு காயம்பட்ட வாதிக்கு முதலுதவி சிகிச்சையளித்த உசிலம்பட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் டாக்டர் வித்யா அவர்களை விசாரித்து விபத்து பதிவேடு பெற்றுள்ளார். மேல் சிகிச்சையளித்த மதுரை மீனாட்சிமிஷன் மருத்துமனையை சேர்ந்த மருத்துவர் சுரேஷ்குமார் அவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றுள்ளார். அந்த **விபத்து பதிவேடுடன் சேர்ந்த காயச்சான்று அ.சா.ஆ. 10**. பின்பு விசாரணையை முடித்து எதிரி மீது பிரிவுகள் 294(b), 307, 506(ii) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

மனுதாரர் கொடுத்த பொய்யான புகாரினை பெற்று சம்பவ இடத்தில் விசாரணை செய்யாமலும், எவ்வித ஆயுதங்களை கைப்பற்றாமலும் மனுதாரர் மற்றும் எதிரியை ஆடைகள் எதுவும் அத்தாட்சியில் கைப்பற்றாமலும், சம்பவ இடத்தில் சம்பவ சாட்சிகள் நேரடியாக விசாரணை செய்யாமலும், தங்களது காவல ் நிலையத்திலே பார்வை மகசர், வரைபடம் தயாா ் செய்தும், எதிரி மீது மிகைப்படுத்தி அளித்த புகார் மனுவினை பெற்றும், மருத்துவமனையில் மருத்துவரை நேரடியாக விசாரணை செய்யாமலும், எதிரி மீது பொய்யான குற்ற இறுதி அறிக்கையை தாக்கல ் செய்துள்ளேன் என்றால ் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**Sd/-Tmt.L.Maheswari,**
**Sub Judge,**
**Usilampatti.**